# IMAM AL GHAZALI'S 'SKEPTICISM AND RATIONALIST THOUGHT' - A PHILOSOPHICAL ANALYSIS

**Pulenthiran Nesan**

Temporary Lecturer, Department of Philosophy,
Faculty of Arts, University of Peradeniya.
pnesan92@gmail.com

**Abstract**

The historical scholars describe the middle age as the dark period. During this period there were no development in the literature, arts, culture, civilization thought and living standard. This middle age period lasted from the fall of Romanian empire (A.C 5th century) and white revival period (15th century). There were no improvement in people's thoughts for about ten centuries. The world was immersed in religion without any scientific thoughts. This research analysis the ideology thoughts of Imam Al Ghazali, one of the most predominant Islamic philosopher lived in the medieval philosophy. The main problem in this research is to find out how the philosophical knowledge is possible in the medieval philosophy period. Hypothesis of this research are re-birth of Greek Thoughts, Islamic Philosophy was contributed to Renaisance, Ghazali expressed wisdom via skepticism.The aim of this research are examirify the contribution of Islamic philosophy and analysing the ways of obtaining knowledge through Ghazali's thoughts. The secondary data were collected from magazines, research papers, and other related articles. The collected data were analysed using descriptive analysis method.

**Keywords:** Middle age, Philosophy, Ghazali, Skepticism

**அறிமுகம்**

மெய்யியலில் மத்திய காலமானது கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் மையப்படுத்தியது. கிறிஸ்தவ மெய்யியலாளர்களைப் போலவே இஸ்லாமிய மெய்யியலாளர்களின் மெய்யியலும் குறிப்பிடத்தக்க செல்வாக்குப் பெற்று காணப்பட்டது. கி.பி 7ஆம் நூற்றாண்டு வரை மெய்யியல் என்ற கலையை முஸ்லிம்கள் அறிந்திருக்கவில்லை. கிரேக்க முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை போதனை செய்த போது மனிதனின் சாதாரண சிந்தனைக்கு ஏற்றுக் கொள்ள முடியாத பல கருத்துக்களை முன்வைத்தார். நாடோடியாக இருந்த பாலைவன மக்கள் மத்தியில் மெய்யியல் ரீதியான சிந்தனை காணப்படவில்லை. ஆனால் இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆன் இவ்வகையான சிந்தனைகளை முன்வைக்காமலில்லை.

இஸ்லாமிய மெய்யியல் சிந்தனை சிரியா தொடர்பிலிருந்து ஆரம்பமாகிறது. முஸ்ஸிம்கள் 7ஆம் நூற்றாண்டில் பல நாடுகளை வெற்றி கொண்ட போது அந்நாடுகளில் காணப்பட்ட சிந்தனைகள் இஸ்லாமியர்களிடம் செல்வாக்கு செலுத்த தொடங்கின. இஸ்லாத்தில் கூறப்பட்ட கருத்துக்களை தெளிவாக புரிந்து கொள்ளாத சிலர் எழுப்பிய வினாக்களுக்கு சிந்தனை ரீதியாக விடையளிக்கும் முயற்சியில் இஸ்லாமிய சிந்தனை வாதிகள் கிரேக்க மெய்யியலாளர்களுடைய கருத்துக்களை ஆராய்ந்தனர். இப்பின்ணனியில் கிரேக்க மொழியில் காணப்பட்ட நூல்களை அரேபியில் மொழிபெயர்க்க ஆரம்பித்தனர். பின்னர் சுய படைப்புக்கள் பலவற்றையும் உருவாக்கினர். 5ம்

நூற்றாண்டு முடிவடையும் போது அரிஸ்ரோட்டிலின் நூல்களும், பிளேட்டோவின் சில நூல்களும் கிரேக்க மூலங்களிலிருந்து ரோமானிய பாரசீக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதோடு கணிசமான அளவு பிந்திய பிளேட்டோனிய எழுத்துக்கள் பின்னர் சீரிய மொழியில் வெளிவந்தது.

இந்த மொழிபெயர்ப்புப் படைப்புக்கள் 8ம் நூற்றாண்டில் பக்தாத்தில் முஸ்லிம் கலிபாக்களின் முயற்சிகளால் அரபு மொழிக்கு மொழியாக்கம் செய்யப்பட்டன. அவர்கள் மூல நூல்களை அரபு மொழியாக்கம் செய்ததோடு தேவையான வியாக்கியானங்களையும் வழங்கினர். முஸ்லிம் மொழிபெயர்ப்பாளர்கள் அரிஸ்ரோட்டிலின் எல்லா நூல்களையும் மொழிபெயர்த்ததோடு பிந்திய பிளேட்டோனிய வாதிகளின் அறிவையும் அவர்கள் மொழிபெயர்ப்புக்குள்ளாக்கினர். இந்த மொழிபெயர்ப்பு மற்றும் விபரிப்பு சிந்தனைகள் விரைவில் முஸ்லிம்கள் செல்வாக்குச் செலுத்திய ஸ்பெயின் ஊடாக சில ஐரோப்பிய நாடுகளையும் சென்றடைந்தன.

கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் அரிஸ்ரோட்டிலை அவரது அளவையியல் பங்களிப்புக்கு அப்பால் எதையுமே அறியாத ஒரு இருண்ட நிலையில் இருந்தபோது முஸ்லிம்கள் அரிஸ்ரோட்டிலின் அளவையியலையும் ஏனைய பிரதான படைப்புக்களையும் மொழிபெயர்ப்புகளினூடாக லத்தீன் மொழி பெயர்ப்புக்களின் வழியாக 12ம் நூற்றாண்டின் கிறிஸ்தவ மெய்யியலாளர்கள் அரிஸ்ரோட்டிலிய பௌதீக அதீதம், பௌதீகம் உளவியல் மற்றும் ஒழுக்கவியல் ஆகியவற்றின் அறிமுகத்தைப் பெற்றனர்.

கிறிஸ்தவ உலகத்தின் கிரேக்க சிந்தனை ஏற்படுத்திய அதே தாக்கம் முஸ்லிம் அறிவுலகத்திலும் நிகழ்ந்தது. அதாவது இங்கும் பகுத்தறிவு முடிவுகள் குர்ஆனிய இறைவாக்கோடு இணக்கம் காணும் சிந்தனை வளர்ச்சி அல்லது பிரச்சினை முன்னணி இடத்திற்கு வந்தது. இன்னொரு வகையில் சுதந்திர சிந்தனை இறைவாக்கு உண்மையோடு மோதும் அறிவுச் சூழல் உருவாகியது. முஸ்லிம்களின் குர்ஆனிய இறைவாக்கை பகுத்தறிவு மயப்படுத்தும் சிந்தனை முயற்சியில் முஃதஸிலாக்கள் என்ற மெய்யியல் குழுவினர் முன்னணி இடத்தில் இருந்தனர். இதில் அவிசின்னா, அவ்ரோஸ் போன்ற பலர் இடம்பெறுகின்றனர். அவிசின்னாவின் சிந்தனைகள் லத்தீன் மொழிக்கு கொண்டு வரப்பட்டதோடு அது 13ம் நூற்றாண்டு கிறிஸ்தவ சிந்தனையில் பெரிய தாக்கத்தை உண்டாக்கியது.

முஃதஸிலாக்கள் முஹம்மது நபி அவர்களின் நெருங்கிய சகாக்களின் காலத்தில் முஃதஸிலா கோட்பாடு உருவாகியதாக கருதப்படுகின்றது. முஃதஸிலாக்கள் பகுத்தறிவு வாதத்தில் பற்றுள்ளவர்களாக விளங்கினர். இப்பிரிவினர் தம்மை ஐக்கியத்துக்கும் நீதிக்குமான குழுவினர் என அழைத்துக் கொண்டனர். நீதியும் ஐக்கியமும் பெரும்பாலும் அவர்களது கடவுள் கருத்துக்களோடு சம்பந்தப்பட்டிருந்தது. அது அவர்களின் நம்பிக்கைகளின் பிரதான கோட்பாடுகளாகவும் காணப்பட்டது. எவ்வாறாயினும் முஃதஸிலாக்கள் பகுத்தறிவையும் நீதியையும் அறிவு மற்றும் சிந்தனையோடு தொடர்புபடுத்தியதில் மத்தியகால பிரிவினருக்கிடையே முன்னுதாரணமிக்க ஒரு சிந்தனைக் குழுவினராக விளங்கினர்.

கிறிஸ்தவ சமய சிந்தனையாளர்கள் கிறிஸ்தவ இறையியல் ஊடாக கிரேக்க பகுத்தறிவு சிந்தனைக்கு ஒரு எதிர்ப்பு நிலையை உருவாக்கியது போன்று ஒரு சிந்தனைப் பின்னணி இஸ்லாமிய உலகில் மத்திய காலத்தில் உருவாகியது. அச்சிந்தனை பிரிவினர் முஃதஸிலா குழுவினரின் கொள்கைகளை நிராகரிப்பதில் அல்லது எதிர்ப்பதில் முன்னணி இடம் வகித்தனர்.

இஸ்லாமிய கலாச்சாரத்தில் மெய்யியல் தொடர்பு அல்-ஹிந்தியிலிருந்து ஆரம்பமாகிறது. ஹெலனிய பாரம்பரியத்தை இஸ்லாமியத்தோடு முன்வைத்ததன் மூலம் ஹிந்தி ஒரு புதிய மெய்யியலை தோற்றுவித்தார். அந்த வகையில் இஸ்லாமிய மெய்யியலாளர்களில் இஸ்லாமிய மெய்யியலை

வளர்ச்சி அடைய செய்தவர்களில் முக்கியமானவர்களாக,

- அல்ஹிந்தி
- அல்பாராபி
- இப்னு சீனா
- இப்னூ கல்தூம்
- இமாம் கஸ்ஸாலி

போன்றவர்களைக் குறிப்பிட முடியும்.

**பகுப்பாய்வு**

*அபு ஹமிட் முஹம்மத் இப்ன் முஹம்மத் அல்–கஸ்ஸாலி* (Abu Hamid Muhammad ibn Muhammad al-Ghazali கி.பி - 1058 – 1111) *பா*ரசீகத்தின் தூஸ் நகரில் பிறந்தார். அரிஸ்ரோட்டிலிய சிந்தனைத் தூண்டலுக்குள்ளான அல்-கஸ்ஸாலி பகுத்தறிவு, சமய நம்பிக்கைக்கு நிபந்தனையற்ற முறையில் அடிபணிந்தாக வேண்டும் என்றதோடு இறைவாக்குக்கு மெய்யியல் முற்றாக அடிபணிய வேண்டும் என்ற கொள்கையையும் வலியுறுத்தினார். எவ்வாறாயினும் வைதீக, கிறிஸ்தவ மறை ஞானியர் போலன்றி புளோட்டினசினுடைய கொள்கையோடு சம தன்மையானதாக கஸ்ஸாலி கடவுளின் இறுதி உள்ளுணர்வு நிலை பற்றி அதிக அக்கறை காட்டினர். மனதை அறிவிலிருந்து முற்றாக அப்பாற்பட்டதாக அன்றி ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்ககூடியதான ஒரு அறிவு ரீதியான சிந்தனை ஒழுங்கமைப்பை அல்-கஸ்ஸாலி தமது மறைஞான கருத்துக்களில் முன்வைத்தார். இது அல் கஸ்ஸாலின் சூபிஸம் என்று அழைக்கப்படுகிறது.

இவர் உண்மையான அறிவின் உரைகல்லாக ஐயத்தை ஏற்றிருந்தார். வலிதான மெய்யறிவை அல்லது பகுத்தறிவை தேடி அறிவதற்குரிய அடித்தள அமைப்பாக ஐயத்தை அவர் பயன்படுத்தினார். உண்மையைக் கண்டறிவதில் அவருக்கிருந்த ஆர்வம் அவரது இளமைப்பருவத்திலிருந்தே ஆரம்பிக்கிறது ''இளமையிலிருந்தே உண்மையை அறிய வேண்டும் என்ற தாகமுடையவனாக இருந்தேன், அது என் உள்ளத்தில் உயர்ந்த பண்பாக இருந்தது'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இளமைக்காலத்தில் ஆரம்பித்த இவரது உண்மை தேடும் தீவிரப் போக்கு அவரது வாழ்வையும் கருத்துக்களையும் மாற்றியமைத்தது. சுதந்திர மனத்துடன் உண்மையை ஆராயும் மனப்பக்குவத்தை அவர் பெற்றார். ''ஐயுறாதவன் ஆராயமாட்டான்'' என்ற கருத்தை தனது இளமைக் காலத்திலேயே அவர் வெளியிட்டார். இவரது ஐயவாதம் அறிவின் இயல்பையும், உறுதித்தன்மையையும் ஆராயும் பின்னணியைப் பெற்றிருந்தது. மேலும் இவரது விரிவுரைகள் விவாதங்கள் நிறைந்ததாகவும், பகுத்தறிவு பூர்வமானதாகவும் விளங்கின. அவரது புகழ்பெற்ற 183 விரிவுரைகள் ''மஜாலெஸ் கஸ்ஸாலிய்யா'' என்ற தலைப்பில் நுலாக தொகுக்கப்பட்டுள்ளது. இவர் இறையியல், சட்டம், நீதி, அளவையியல், இசையியல், மெய்யியல் போன்ற பல்துறைகளில் இஹ்யாவுல் உலூத்தீன், கீமியாயே, சஆதத், பிழையிலிருந்து விடுதலை போன்றன உள்ளடங்கலாக நானூறு நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் பல காணாமல் போய்விட்டன, சில எதிர்வாதிகளால் எரிக்கப்பட்டன. 'யாக்கூத்துத்தாவில்' என்ற தலைப்பில் அல்குர்ஆனுக்கு எழுதிய நாற்பது பக்கங்களைக் கொண்ட விரிவுரை அவ்வாறு காணாமல் போன நூல்களில் ஒன்று எனக் குறிப்பிடப்படுகிறது.

அல்-கஸ்ஸாலியின் ஐயவாதம் அறிவின் இயல்பையும், உறுதித்தன்மையையும் ஆராயும் மெய்யியல் பின்னணியைப் பெற்றிருந்தது. அறிவின் மீதான விமர்சனம் மெய்யியலின் பண்பாகும். அல்-கஸ்ஸாலியின் காலத்தில் கிரேக்க மெய்யியல் சிந்தனை முஸ்லிம்களின் கல்வி மரபில் முக்கிய

இடத்தைப் பெற்றது. நேராகவோ மறைமுகமாகவோ கிரேக்க சிந்தனை கஸ்ஸாலியிடம் செல்வாக்கு செலுத்த வாய்ப்பிருந்தது எனலாம். இதனாலேயே கிரேக்க மெய்யியலை கற்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார்.

இமாம் அல்-கஸ்ஸாலியின் ஐயநிலை அவரது வாழ்நாள் முழுக்க நீடித்திருக்கவில்லை. ஐயநிலை அவரில் நிலைத்திருந்த காலப்பகுதி சில மாதங்களை மட்டும் உள்ளிட்டதாகும். எனினும் அதுவரை காணப்பட்ட அறிவின் எல்லா அடிப்படைகளையும், பிரமாணங்களையும், அதிகாரங்களையும் அவர் நிராகரித்தார். சுதந்திர சிந்தனையின் பண்புகளில் ஒன்று முந்தைய அறிவுப்பாரம்பரியங்களை ஐயத்திற்குள்ளாக்குவது அல்லது நிராகரிப்பது என்ற கருத்தை தமது ஆய்வின் முற்கோளாக அவர் ஏற்றுக்கொண்டார். இதனை ‘‘கண்ணில்படும் விடயங்களை உணரவேண்டும் என்ற எனது தாகம் மிக இளமைப்பருவத்திலிருந்தே என்னில் ஒரு பழக்கமாக இருந்தது….’’ என்பதனூடாக அறியலாம். ‘நான் நம்பிக்கை கொள்வதற்குரிய இயல்பைக்கொண்ட விஞ்ஞானம் ஒன்று முன்னதாகவே இருக்கவில்லை’ என்ற டேக்கார்ட்டின் கருத்தோடு இதனை ஒப்பு நோக்குவது பொருத்தமானது.

உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் சரியான இயற்கை நிலையில் தான் பிறக்கின்றனர். ஆனால் அவர்களின் பெற்றோர்கள் தாம் அவர்களை யூதர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ ஆக்கிவிடுகின்றனர் என்ற நபிகளின் வாக்கு மனித அறிவு பற்றிய கருத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாக கஸ்ஸாலி கூறுகிறார். உண்மையில் இயற்கை நிலை என்றால் என்ன? பெற்றோர்களதும் ஆசான்களதும் அதிகாரங்களிலிருந்து பெறப்பட்ட நம்பிக்கைகளின் தன்மை என்ன? என்று அறிய தமது அக உணர்வு துடித்ததாக கஸ்ஸாலி குறிப்பிட்டுள்ளார். இத்தகு புதிய எண்ணங்களின் வாயிலாக அறிவு பற்றிய தூய விசாரணையின் எல்லைக்கு கஸ்ஸாலி பிரவேசித்தார். விடயங்களையல்ல அறிவை ஆராய்வதே தமது நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார். ‘பொருள்களின் யதார்த்தம் என்ன? என்ற அறிவையே நாம் தேடுகிறோம், ஆனால் அறிவின் யதார்த்தம் என்ன? என்பதைத் தான் முதலில் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.’ என்கின்ற அவரது கருத்தில் இது தெளிவாகப் புலப்படுகிறது.

டேக்காட்டினைப் போலவே உறுதியான அறிவைப் பெறுவதற்கு ஐயத்தை கஸ்ஸாலியும் பிரதானமாகக் கையாண்டார். ஐயத்தின் ஆரம்பநிலையில் இரு சிந்தனையாளர்களுமே இதுவரை தாம் உண்மை என்று நம்பியவைகளைப் பரீசீலனைக்குட்படுத்தினர். முக்கியமாக புலக்காட்சியை ஐயம் என்ற உரைகல்லின் அழுத்தமான சோதனைக்குள் கொண்டு வந்தனர். அதாவது ‘எந்த அறிவில் ஒரு விடயம் அணு அளவும் ஐயத்திற்கிடமின்றி அவ்வாறுதான் இருக்க வேண்டும் என்று புலனாகிறதோ, சிறிதளவு தவறுக்கோ, பிரம்மைக்கோ இடமில்லாதிருக்கிறதோ அதுவே நிச்சயமான உறுதியான அறிவாகும் என்று எனக்கு தெளிவாயிற்று’ என்ற கஸ்ஸாலியின் வரிகளினூடாக அறியலாம்.

புலக்காட்சியில் நம்பிக்கையற்ற தன்மை, கஸ்ஸாலியின் ஐயவாதத்தின் முக்கிய பண்பாகும். முதலில் மனதின் எண்ணங்களை அவர் சந்தேகித்தார். மெய்யறிவுக்குப் பொருத்தமான வகையில் வலிதான எந்த கோட்பாட்டையும் உருவாக்கும் எந்த சக்தியும் புலன்களுக்கில்லை என அவர் கருதினார். புலன் அனுபவங்கள் நம்பிக்கையற்றதாயின் கட்டாய உண்மையையும் நம்ப முடியாத நிலை தோன்றும். இவ்வாறு மெய்யறிவுக்கான அவசிய விதிகளை அவர் சீராக்க முயன்ற போது அவரது நம்பிக்கைகள் அதிர்ச்சிக்குள்ளாகின. சில இன்றியமையாத விடயங்களில் மனித அறிவு உண்மையான விபரங்களைப் பெறுவதில் தடைகள் இருப்பதாக அவர் உணர்ந்தார். முக்கியமாக கண்பார்வை பல தவறுகளைப் புரிகிறது.

உதாரணம் - தண்ணீரில் அமிழ்ந்துள்ள தடி முறிவடைந்திருப்பதாக தோன்றுகிறது. இத்தகைய பலவீனங்களை அவர் உணர்ந்ததால் பார்வைப்புலனை ஏற்க மறுத்தார். இதனை 'புலனுணர்விடமும், கட்டாய உண்மைகளிடமும் நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஏற்கனவே மற்றவர்களிடமிருந்து நாம் பெற்றோமே அதே நம்பிக்கையைப் போன்றது தானா என்பதை அறிந்து கொள்ள வேண்டும்...' என்பதனூடாக அறியலாம்.

இவ்வாறு புலக்காட்சிகள் பொருள்களின் உண்மைத்தரவுகளைத் தருவதில் தவறிழைக்கின்றன. அத்தோடு அவை சரி என்ற வகையில் தீர்ப்புக்களையும் வழங்குகின்றன. இவற்றிலும் இவை மாதிரியான விடயங்களிலும் புலன்காட்சிகள் நீதிபதிகளாகி சில தீர்ப்புக்களை வழங்குகின்றன. ஆனால் அதன் முடிவுகள் தவறானவை என்பதை அறிவாற்றல் மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டுகிறது என்கிறார் இமாம். மேலும் கணித அறிவுகள் நிச்சயத்தன்மை வாய்ந்தவை என்பது அல்-கஸ்ஸாலியின் கருத்து. இக் கருத்து பிளேட்டோவின் சிந்தனைகளில் பிரதிபலித்தது. நிச்சயமான அறிவை கஸ்ஸாலி பெரும்பாலும் கணிதத்துடன் அல்லது இயற்கை விஞ்ஞான உண்மைகளுடன் ஒப்பிட்டார். 'அறிவு ஒன்று கணிதத்தைப் போல தவறற்றதாயின் அவ்வகையான அறிவை எந்த சூழ்நிலையிரும் நான் ஏற்கத் தயங்கமாட்டேன்' என்றார். அவர் கணிதத்தை முழுமையான விஞ்ஞானமாக ஏற்றிருந்தார். உறுதியான அறிவைத் தருவதில் பௌதீகவியல், வானவியல் ஆகிய விஞ்ஞானங்களுக்குரிய இடத்தையும் அவர் அங்கீகரித்தார். இவ் விஞ்ஞானங்கள் சமயத்தை ஏற்றுக்கொள்வனவோ மறுப்பனவோ அல்ல. இவ்விஞ்ஞானங்கள் நிரூபிக்கப்பட வேண்டிய விடயங்கள். ஒரு தடவை அந்த நிரூபணத்தைப் புரிந்து கொண்டால் பின்னர் அதை மறுப்பது சாத்தியமற்றது என்று அவ்விஞ்ஞானங்களின் உறுதியான அறிவு நிலையை கஸ்ஸாலி விளக்கினார்.

கஸ்ஸாலியின் இளமைக் காலத்தில் அவரை மிகவும் பாதித்த விடயம் 'உறுதியான அறிவைப் பெறுவது எவ்வாறு' என்ற கேள்வியே ஆகும். அதாவது எந்த அறிவு சற்றேனும் ஐயத்திற்கிடமின்றி அது அப்படித்தான் இருக்குமென்று நிச்சயமாப் புலனாகிறதோ, தவறுக்கும் மாயைக்கும் சிறிதும் இடமில்லாததோடு அவ்வாறான விடயத்திற்கு உள்ளத்திலும் இடமில்லாமற் போகிறதோ அதுதான் நிச்சயமான உறுதியான அறிவு என்கிறார் கஸ்ஸாலி. மேலும் ஐயத்திற்கிடமற்ற அறிவின் மீது அவர் உறுதியான நிலையைக் கொண்டிருந்தார். மேலும் பார்வைப் புலனை விட அறிவாற்றல் அல்லது பகுத்தறிவு பல மடங்கு உயர்வானதென கஸ்ஸாலி கூறுகிறார். இவரது கருத்துப்படி புலுனுணர்வு முதலாவது படித்தரமாகும். புலனுணரிவு தவறு செய்யக்கூடியது. இதற்கு அடுத்த உயர் படித்தரத்தில் இருப்பது பகுத்தறிவு ஆகும். புலனுணர்வின் தவறுகளைத் திருத்தி அறிவில் சீர்நிலையை ஏற்படுத்தும் சக்தி இதற்குண்டு என்கிறார்.

அறிவின் படித்தரங்கள் பற்றிய கஸ்ஸாலியின் கண்ணோட்டம் பகுத்தறிவுக்கு அப்பால் உள்ள மற்றொரு அறிவு நிலையையும் விபரிக்கிறது. அறிவாற்றலில் தவறுகளை சுட்டிக்காட்டும் மற்றொரு நீதிபதி என கஸ்ஸாலி இதனை வர்ணிக்கிறார். அதாவது பகுத்தறிவால் பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகள் வெற்று முடிவுகள் என்று இப்படித்தரத்தில் மனிதன் கருத வாய்ப்புண்டு. அதாவது பகுத்தறிவோடு இணங்காத கொள்கைகள் உருவாகலாம் என்பது இதன் பொருள். ஆன்ம அநுபூதி அனுபவங்களில் தம்மை ஈடுபடுத்திய காலகட்டத்தில் இக்கருத்தை கஸ்ஸாலி வெளியிட்டார். இதனை கஸ்ஸாலியின் இரண்டாம் கட்ட ஆன்ம விழிப்பு நிலை எனலாம். இக்கட்டத்தினூடாக மதிநுட்பத்திற்கு அப்பால் மேலும் ஒரு படித்தரம் உண்டு என்கிறார் கஸ்ஸாலி. இதில் வேறொரு கண் திறக்கிறது. அது மறைவானவற்றையும் நிகழப்போவனவற்றையும், மதிநுட்பத்திற்குட்படாதவற்றையும் காட்டக்கூடியது என்கிறார். இதனடிப்படையில் கஸ்ஸாலி இறையியல்வாதியும், கூத்துவவாதியும்

ஆவார். சமய உண்மைகளுக்கும், பகுத்தறிவுக் கண்ணோட்டத்திற்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளுக்கு தத்துவ நோக்கிலிருந்து விடைகாண கஸ்ஸாலி முயன்றார்.

தீவிர தூய அறிவாராய்ச்சியின் அடிப்படையுடன் ஆரம்பித்த கஸ்ஸாலியின் ஐயவாதம் சமய ஆன்மீக உண்மைகளுடன் சமரசம் காண்பதில் நிலைகொண்டது. ஆய்வறிவுவாத அல்லது பகுத்தறிவு அவரிடத்தில் வெற்றி காணவில்லை. அவர் சூபித்துவ உண்மைகளினூடாக இப்பிரச்சினைக்கு விடைகாண முயன்றார். புலன்கள் எவ்வளவு பலவீனமானதென்று வாதாடினாரோ அதே நேரத்தில் மற்றொரு மட்டத்தில் அறிவும் பலவீனமானதென்று வாதாடினார்.

**முடிவுரை**

ஆய்வானது மத்திய காலத்து சூழ் நிலையையும் மெய்யியலில் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகளைப் பிரதானமாக கிறிஸ்தவ மெய்யியல், இஸ்லாமிய மெய்யியல் என்று பகுக்கின்றது. இங்கு கிறிஸ்தவ மெய்யியலாளர்கள் பெரிதும் மதக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு தமது சுய சிந்தனைகளை, கிறிஸ்தவ மத உண்மைகளை மெய்யியலாய்விற்கு உட்படுத்தினர். ஆனால் முஸ்லிம் மெய்யியலாளர்கள் கிரேக்க தத்துவங்களை மூலமாகக் கொண்டு அறிவார்ந்த, நம்பிக்கைகட்கு புறம்பான விடயங்களை மெய்யியலாராய்ச்சியில் வெளிப்படுத்தினர்.

கஸ்ஸாலி கணிதத்தை ஒப்பான அறிவினை பலமாக ஏற்றுக் கொண்டதோடு, ஐயவாதம் மூலம் சகல பாகங்களையும் கேள்விக்குட்படுத்தி அறுதி உண்மையை எவ்வித சந்தேகங்களுமன்றி வெளிப்படுத்தினார். இவரது சிந்தனைகள் பின்நாளில் நவீன மெய்யியலில் டேக்கார்ட் போன்றோரின் அறிவு வாதச் சிந்தனைகளுக்கும் அடிப்படையானது.

புலக்காட்சியில் நம்பிக்கையற்ற தன்மை, கஸ்ஸாலியின் ஐயவாதத்தின் முக்கிய பண்பாகும். முதலில் மனதின் எண்ணங்களை அவர் சந்தேகித்தார். மெய்யறிவுக்குப் பொருத்தமான வகையில் வலிதான எந்த கோட்பாட்டையும் உருவாக்கும் எந்த சக்தியும் புலன்களுக்கில்லை என அவர் கருதினார். புலன் அனுபவங்கள் நம்பிக்கையற்றதாயின் கட்டாய உண்மையையும் நம்ப முடியாத நிலை தோன்றும். இவ்வாறு மெய்யறிவுக்கான அவசிய விதிகளை அவர் சீராக்க முயன்ற போது அவரது நம்பிக்கைகள் அதிர்ச்சிக்குள்ளாகின. சில இன்றியமையாத விடயங்களில் மனித அறிவு உண்மையான விபரங்களைப் பெறுவதில் தடைகள் இருப்பதாக அவர் உணர்ந்தார். முக்கியமாக கண்பார்வை பல தவறுகளைப் புரிகிறது.

இஸ்லாமிய மெய்யியலாளர்களது பங்களிப்பினால் மத்தியகாலத்தின் பிற்பகுதி அறிவொளிக் காலம் போல் தோற்றம் காண வாய்ப்பேற்பட்டது. இவ்வாறாக இமாம் கஸ்ஸாலியின் பங்களிப்பு இஸ்லாமிய மெய்யியலில் காத்திரமான இடத்தைப் பெற்றுக் கொண்டது.

***உசாத்துணை நூற்பட்டியல்***

Seyyed Hossein Nasr, (2001) History of Islamic Philosophy, George Washington university, Routledge Publications. USA.

Majid Fakhry, (2004) A History of Islamic Philosophy, Columbia University Press.

Mohd Farooq Mirza, (2017), Imam-Al-Gazzali (As an educational thinker), International Journal of Advanced Education and Research, Higher Education Department, Govt. P.G. College Rajouri, Jammu and Kashmir, India.

*ஜமாஹீர்.பீ.எம், (2010) "**மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும்**" நதா வெளியீடு: கண்டி–இலங்கை.*

*ஞானகுமாரன். நா, (2003) “**மெய்யியல்**” செல்வம் வெளியீடுபருத்தித்துறை, யாழ்ப்பாணம்.*

*நாராயனைன். க, (1985) “**மேலைநாட்டு மெய்ப்பொருள** (சோக்கிரட்டீஸ் முதல் சார்த்தர் வரை தமிழ்ப்புத்தகாலயம், சென்னை.*

*அனஸ், எம்.எஸ்.எம், (2003) “**மெய்யியல் அறிமுக உரைகள** பண்பாட்டு ஆய்வு வட்டம், பேராதனை.*

file:///G:/Drive/spll/Islamic%20philosophy%20-%20Wikipedia.html

file:///G:/Drive/spll/Islamic%20philosophy%20-%20New%20World%20Encyclopedia.html

http://digressionsnimpressions.typepad.com/digressionsimpressions/2016/01/challenging-reason-al-ghazali-i.html

file:///C:/Users/shan/Downloads/SYN_62_01_09_Veljacic_Akpinar_II_doi.pd